# வர்த்தகவலயம், மும்மொழித்திட்டம் தமிழருக்கு ஆபத்து!


பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 11 ஸபர் 14 இதழ் 345
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24-1-78



சன் சயின் சோப்

பாவனையாளர்கள்
மிகவும் விரும்பி பாவிப்பது
சன் சயின் சோப்
இலங்கையில் எந்தக்
கடையிலும் சன் சயின் சோப்
என்று கேட்டு வாங்கி
அதன் தரத்தை
அறிந்து கொள்ளுங்கள்

லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி


## கோடீஸ்வரன் எச்சரிக்கை

[யாழ்ப்பாணம்]

'திருகோணமலை மாவட்டத்தில் சேருவலை என்ற புதிய தொகுதி உருவாக்கப்பட்டதன் மூலம் மூன்றில் இரண்டு நிலப்பகுதி பறிபோய்விட்டது. வர்த்தக வலயம் திருகோணமலைக்கு விஸ்தரிக்கும் போது மீதியாக உள்ள மூன்றில் ஒரு பகுதியும் பறிபோய்விடும். வர்த்தக வலயமும் மும்மொழித் திட்டமும் தமிழருக்கு பெரும் ஆபத்து!"

யாழ் ஹரன் தியேட்டரில் நேற்று நடந்த தமிழர் சுயாட்சிக் கழகப் பொதுக்கூட்டத்தில் பேசிய சுயாட்சி கழக பொதுச் செயலாளர் திரு. செ. கோடீஸ்வரன் மேற்கண்டவாறு கூறினர். [6-ம் பக்கம் பார்க்க]

# "யாழ். குடாநாட்டு பஸ்தேவை விரைவில் பூர்த்தியாகும்!"

## பிரதி அமைச்சர் உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

**"யாழ்ப்பாணத்திலுள்ள பஸ் தட்டுப்பாட்டை நீக்கி, பிரயாணிகள் கஷ்டத்தைத்தீர்க்க விரைவில், போதியளவு பஸ்வண்டிகளை இங்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதியளிக்கிறேன். இந்த டிப்போவிற்கு மட்டுமன்றி, யாழ். குடாநாட்டிலுள்ள சகல பஸ் டிப்போக்களின் தேவைகளையும் பூர்த்திசெய்வேன்"**

யாழ். பஸ் நிலையத்தில் நேற்று அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் பிரதி போக்குவரத்து அமைச்சர் திரு எச் குலரத்தினு மேற்கண்டவாறு கூறினர்.

பஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு எம் ஏ சிவலோகநாதன் அமைச்சருக்கு மாலை சூட்டிவரவேற்ருர். பிரதேச முகாமையாளர் திரு கே நாகரத்தினமும் கலந்துகொண்டார். ஊழியர்,பிரயாணிகள் மத்தியில் அமைச்சர் திரு குலரத்ன மேலும் கூறியதாவது:

"யாழ்ப்பாண பஸ் டிப்போ தேவைகள் பற்றி அறிந்திருக்கின்றேன். ஆகஸ்ட் கலவரத்தின் போது நான் யாழ். பஸ் நிலையத்திற்கு வந்து,இங்குள்ள போக்குவரத்து நிலைமைகளை நேரில் அறிந்து கொண்டேன். யாழ்ப்பாண பஸ் ஊழியர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிருர்கள். இந்த டிப்போவிற்குத் தேவையான டயர், பட்டரி மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

"வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது யாழ்ப்பாண எம் பி திரு வெ யோகேஸ்வரன் இங்குள்ள போக்குவரத்து தேவைகள் பற்றி வலியுறுத்தி கூறினர். இத்தேவைகள் நிறைவேற்றி வைக்கப்படும்.

"30 பஸ்களை இங்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. இங்குள்ள தட்டுப்பாட்டை நீக்க, போதியளவு பஸ் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதியளிக்கின்றேன்".

பஸ் நிலையபொறுப்பதிகாரி திரு எம் ஏ சிவலோகநாதன் கூறியதாவது: "யாழ்ப்பாணத்தில் பிரயாணிகளும், பஸ் ஊழியர்களும் படும் கஷ்டத்தை போக்க ஆகக்குறைந்தது 30 பஸ்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். வடபகுதி பஸ் ஊழியர்கள் போக்குவரத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்கள். இங்கு பஸ் பற்ருக்குறை இருந்தும் ஓடிமுடியாத பஸ்களை, பிரயாணிகள் நன்மை கருதி பொறுப்பேற்று ஊழியர்கள் ஓட்டுகின்றுர்கள். சில இடங்களில் இரவில் இரண்டு முன் லைட்டும் இல்லாமல் பஸ்களை (6-ம் பக்கம் பார்க்க)

## வெங்காயம் அந்.ரூ.400

[கொழும்பு]

சின்ன வெங்காயத்தை ஒரு அந்தர் 400 ரூபா விதம் இன்று முதல் விற்பனை செய்ய புறக்கோட்டை உணவுப் [6ம் பக்கம் பார்க்க]

வதிரியில் துப்பாக்கிச் சூடு

## இளைஞன் பலி! ஒருவர் கைது

(நெல்லியடி)

நேற்றுமுன்தினம் மாலை மாலிச் சந்திக்கருகில் வதிரியில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சுப்பிரமணியம் தவராஜா (வயது 23) ஸ்தலத்திலே துடிதுடிக்க மாண்டார்.

இச்சம்பவத்துக்கு குடும்ப பகைமையே காரணமென்று அறியப்படுகின்றது. இதுசம்பந்தமாக வல்லிபுரம் சிவலிங்கம் என்பவரை பருத்தித்துறைப் பொலிசார் சந்தேகத்தின்மீது கைதுசெய்து, காவலில் வைத்துள்ளனர்.

ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரி. குணரெத்தினம், சார்ஜண்ட்டுகள் செ. மாணிக்கராஜா, எம். பொன்னம்பலம் ஆகியோர் சந்தேகநபரைக் கைதுசெய்ததுடன் கொலைக்கு பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## தேர்தல் சின்னம்

புதுடில்லி, ஜன 22

திரு. கே. பிரமானந்த ரெட்டியைத் தலைவராகக் கொண்ட பாரத தேசிய காங்கிரஸுக்கே பசுவும் கன்றும் தேர்தல் சின்னமாக இருக்கும் என்று தேர்தல் கமிஷன் இன்று தீர்ப்பு வழங்கியது.

கைதடி நுணுவில் சந்தியில்

# பயங்கர லொறிவிபத்தில் இருவர் பலி!

[யாழ்ப்பாணம்]

**கைதடி நுணுவில் சந்திக்கருகில் நேற்றுமுன்தினம் இரவு 12 மணியளவில் நடந்த பயங்கர லொறி விபத்தில்; சாரதியும், பிரயாணியொருவரும் பலியானுர்கள். கிளீனர் பலத்த காயங்களுடன் மயக்கமடைந்தநிலையில் யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

கொழும்பிலிருந்து சிலிண்டர் வீட்டு தளபாடங்கள், மற்றும் பொருட்களுடன் வந்த இந்த லொறி, கைதடி நுணுவில் சந்திக்கருகிலுள்ள பனைமரம் ஒன்றில் மோதி நடுவீதியில் குடைசாய்ந்ததால் இவ்விபத்து ஏற்பட்டது பனையின் வட்டு முறிந்து விழுந்துவிட்டது.

இந்த லொறியில் சென்ற பிரயாணியான மீசாலை வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவராசசிங்கம் [வயது 35] ஸ்தலத்திலேயே பலியானுர். லொறிச் சாரதியான சண்டிலிப்பாயைச் சேர்ந்த கந்தையா நவரத்தினம் [28வயது] யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு, நேற்று நள்ளிரவு மரணமானுர். மயக்கமடைந்த கிளீனர் முகம்மட் லெப்பை மஹரூப் (49வயது) ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து அயலில் உள்ளவர்கள் உடனடியாக வந்து லொறியிலிருந்தவர்களை வெளியில் எடுத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். கிளீனர் சிறிதுதூரம் வீசப்பட்டு மயக்கமடைந்தநிலையில் கிடந்தார்

இரவு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சாவகச்சேரி பொலிஸ் நிலைய போக்குவரத்துபிரிவு பொறுப்பதிகாரி திரு. என். குகநாதன், கான்ஸ்டபிள் திரு. க. திருநாவுக்கரசு, ஆகியோர் உடனடியாக ஸ்தலத்திற்கு சென்று விசாரணைக்கான ஏற்பாட்டை செய்தனர்.

நேற்றுக்காலை சாவகச்சேரி (6ம் பக்கம் பார்க்க)

# "வடக்கே மகாவலி வருவது நிச்சயம்! விரைவில் சாத்தியம்"

[நெல்லியடி]

'வடக்கே மகாவலி வருவது நிச்சயம், அது விரைவிலேயே சாத்தியமாகும். இதன்மூலம் கிராமிய அபிவிருத்தி ஏற்பட்டால், நாடு பொருளாதார சுதந்திரம் பெற்றுவிடும். அப்படி நாடு பொருளாதாரத்தில் வளம் கொழிக்குமாயின் கொழும்பைப்போல் சகல இடங்களிலும், பஸ் சேவையை திறம்படச் செய்ய முடியும்' என்று நேற்றுக்காலை இங்கு திடீர் விஜயமொன்றினை மேற்கொண்ட பிரதிப் போக்குவரத்து அமைச்சர் திரு. எச். குலரத்தின, பருத்தித்துறை டிப்போவில் தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 'யாழ். மாவட்டத்தில் பஸ் வண்டிகள் பற்ருக்குறை காணப்படுகிறது. இதனுல் மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகிருர்கள். 2000 பஸ் அடிச்சட்டங்கள் விரைவில் இறக்குமதி செய்யப்படவுள்ளன. இவை வந்ததும் சகல இடங்களிலும் பஸ்சேவை சீராகும் என்ருர்.

'இ. போ. சபை 8 பிராந்திய டிப்போக்களாகப் பிரிக்கப்படவுள்ளது. இவற்றுக்குப் பல அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. இதன் மூலம் தொழிலாளர் பிரச்சனை தீர்க்கப்படும்' என்றும் அமைச்சர் கூறினர்.

பருத்தித்துறை டிப்போ பொறியியல் பிரிவுக்கு பிரதியமைச்சர் சென்று பார்வையிட்டு, அங்குள்ள குறைபாடுகளைச் சீராக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பிரதியமைச்சர் மிகஎளிமையாக சாரமும், பச்சைச்சேட்டும், சாதாரண சிலிப்பரும் அணிந்து குறைபாடுகளை உன்னிப்பாக கேட்டறிந்தார்.

தேசிய ஊழியர் சங்க தலைவர் திரு எஸ் ஆறுமுகமும் தொழிலாளர் பிரச்சனைகளை பிரதி அமைச்சருக்கு விளக்கினர்.

## கலாட்டா செய்தவர் கைது!

(யாழ்ப்பாணம்)

சுன்னுகத்தில் கூப்பன் பரிசிலனை நடைபெற்ற மயிலனி மகாவித்தியாலயத்திற்குச் சென்ற ஒருவர், அங்குள்ள தஸ்தாவேஜுகளை சேதப்படுத்தி, உத்தியோகஸ்தர்களை தாக்கி, தளபாடங்களை உடைத்ததுடன்; தனது வீட்டு கூப்பன்களையும் கிழித்து எறிந்ததாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபரான' கந்தசாமி தர்மராசாவை பொலிஸார் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### தேவை

G. C. E. வரை படித்த திறமையுள்ள யாழ். இளைஞருக்கு [கார், வான்] ட்ரைவர் வேலை தேவை. விளம்பர இல. 8304 C/o 'ஈழநாடு' லிமிட்டேட், யாழ்ப்பாணம். 8304

### விற்பனைக்கு

நீர்வேலியில், வீடுகட்டக்கூடிய 12 பரப்புத் தோட்டக்காணி, பருத்தித்துறை பிரதான வீதியில், அகஸ்தியர் இந்துக்கல்லூரி, உபதபால் நிலையத்துக்கு அண்மையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: த. கதிரவேற்பிள்ளை, 642, பேராதனை வீதி, கண்டி. 8256

### தவறிவிட்டது

1977-ம் ஆண்டு வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் 174870 இலக்கம் கொண்ட லைசென்ஸ் ஆகியன கொண்ட பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொ. பத்மநாதன், உடுவில் வடக்கு, சுன்னாகம் அல்லது இந்திரா என்ஜினியேர்ஸ், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 8302

### கல்வி

1978 (August) சிங்களம் (விருப்பத்திற்குரிய) அரசாங்க சிங்கள தேர்ச்சிப் பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் 31-01-78 முன்பு சேர்ந்து கொள்ளவும். அதிபர், ஸ்ரீ நாக விகாரை, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7214. 8301


# தட்டுவங்கொட்டியில் ஒருவர் தாக்கிக் கொலை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, தட்டுவங்கொட்டியைச் சேர்ந்த கந்தையா சுந்தரலிங்கம் என்பவர், கோஷ்டி ஒன்றினால் பலமாக தாக்கிக்கொலைசெய்யப்பட்டார்.

சந்தேகநபர்களான கே. முத்துக்குமாரு, எம். செல்வநாயகம், கே. தங்கேஸ்வரன், வீரசிங்கம், வி. தம்பிராசா ஆகியோருக்கு பிடிவிருந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ் பதில்நீதிபதி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினர்.

இறந்தவர் பூநகரிக்குசென்று கொண்டிருந்தபோது வழியில் இக்கோஷ்டியினரால் தாக்கப்பட்டு, இம்மாதம் 15ம் தேதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என விசாரணையில் தெரியவந்துள்ளது. நேற்று முன்தினம் காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் மரணமானர்.

யாழ். பதில் நீதிபதி கொலை எனத் தீர்ப்பளித்து சந்தேக நபர்களை கைதுசெய்ய பிடிவிருந்து பிறப்பித்துள்ளார். (க-உ)

# ஜனாதிபதி பதவிஏற்பு: வடக்கில் தொகுதி ரீதியாகவைபவம்

[யாழ்ப்பாணம்]

இலங்கையின் ஜனாதிபதியாக திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன பதவியேற்பதையிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் பெப்ரவரி 4ந் தேதி தொகுதிவாரியாக வைபவங்கள் நடைபெறவிருக்கிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ். பிரதேசக் காரியாலயத்தில் ஊர்காவற்றுறை ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. ம. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி வைபவங்கள் பற்றி முடிவுசெய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் வடபகுதி ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

வைபவங்களைத் தொகுதி ரீதியாக ஏற்பாடு செய்வதற்கு திரு. ம. அமிர்தலிங்கத்தைச் செயலாளராகக் கொண்ட விழாக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இவ்விழாக் குழுவினர் நேற்றுக் காலை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ ஏ எல். விஜயபாலாவைச் சந்தித்துத் தொகுதி ரீதியான வைபவங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினர்கள். [க]

# 'ஹன்டி'யின் வாழ்க்கை வரலாற்றைவெளியிடமுடிவு

[யாழ்ப்பாணம்]

அரசியல், கல்வி, சமூக சேவை, கூட்டுறவு ஆகிய பல்வேறு துறைகளில் ஈடிணையற்ற அரும்பணி புரிந்த அமரர் ஹன்டி பேரின்பநாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அமரர் ஹன்டி பேரின்பநாயகம் நினைவாஞ்சலிக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

ஆகிய தேச கட்டுரைப் போட்டியில் பல்லாண்டுகளுக்கு முன்பு பரிசுபெற்று, தமிழ் மக்களுக்கு சர்வதேசப் புகழை அள்ளிக்கொடுத்த அமரர் பேரின்பநாயகத்தின் பெயரால் ஆண்டுதோறும் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவேண்டுமென்றுமானிப்பாய் பட்டினசபையைக் கேட்டுக்கொள்வதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

மானிப்பாய் பட்டினசபைத் தலைவராகப் பல்லாண்டு பணிபுரிந்த அன்னரின் உருவப் படத்தைத் திரைநீக்கஞ்செய்வதோடு, அடுத்த மாதம் 19ந் திகதி அன்னருக்கு ஓர் அஞ்சலிக் கூட்டம் நடத்துவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அன்னர் அதிபராக அரும்பணியாற்றிய கொக்குவில் இந்துக்கல்லூரியில் பேரின்பநாயகம் நினைவுச் சொற்பொழிவுப் பீடமொன்றை அமைக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொள்வதெனவும், ஆசிரிய உலகுக்கு அவர் ஆற்றிய சேவையைச் சிறப்புறச் செய்யுமுகமாக அவர் பெயர் நின்று நிலவ, மணிமண்டபம் ஒன்றை அமைக்குமாறு வடமாகாண அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களைக் கேட்டுக்கொள்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

வித்துவான் வேலன் உட்படப் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். [இ]

# அமரர் நடராஜாவுக்கு பிரமுகர்கள் அஞ்சலி

[பருத்தித்துறை]

''வடமராட்சியில் சேமன் என்றால் திரு நடராசாவையே குறிக்கும் அன்னர் 30 ஆண்டு காலமாக பருத்தித்துறை நகருக்கு ஆற்றிய சேவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையாகும்''

பருத்தித்துறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு க துரைரத்தினம், அமரர் நடராசாவின் ஈமக்கிரியைகளின்போது இரங்கலுரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில், அமரர் நடராசாவை எதிர்த்து 5 தடவை தேர்தலில் போட்டியிட்ட போதிலும் ''மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணங்கமழும்'' என்பதற்கமைய அவரது உயரிய பண்புகளை தாம் மெச்சியுள்ளதாகக் குறிப்பிட்டார்

நடராசாவின் பிரிவினால் பருத்தித்துறையில் ஒரு சூனிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்

பட்டயக் கணக்கறிஞர் திரு ஏ சோமசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில், அவர் அரசியலில் தோல்விகளைக் கண்டமையால் அவரது வாழ்க்கை தோல்வியடைந்துவிட்டதாகக் கருத முடியாது இங்கு சோகமே உருவாக திரண்டிருக்கும் மக்கள் வெள்ளமே அவரது வாழ்வின் வெற்றியை பறைசாற்றுவதாகக் குறிப்பிட்டார்

தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் பேசுகையில் அன்னரின் சேவைக்குப் பருத்தித்துறை நகரசபைக் கட்டடமும் பருத்தித்துறை மக்கள் சந்தையும் சான்று என்று கூறினர்.

திரு. எஸ். வி. குணநாயகம் பேசுகையில் அமரர் நடராசா நட்பு, கொடை, தயை ஆகிய நற்பண்புகளை உடையவரென்றும், அவர் பிரமுகருக்குரிய சகல லட்சணங்களையும் உடையவராக இருந்தாரென்றும் கூறினர்.

பண்டிதர் ஏரம்பமூர்த்தி பேசுகையில், நகரசபைத் தலைவராக 7 வருடங்கள் இருந்த போதும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக 4 வருடங்கள் இருந்தபோதும் சகல தீர்மானங்களும் வாக்கெடுப்புக்கு விடாமலே நிறைவேற்றப்பட்டதாகவும், இது அவரது சாதுரியத்தைக் காட்டுவதாகவும் கூறினர்.

சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம், திரு. மு. பொ. வீரவாகு. திரு. வேலும்மயிலும் ஆகியோரும் பேசினர்கள். [க)

# அவசரம்: மூதாட்டியின் உயிர் பறித்ததாம்

(யாழ்ப்பாணம்)

பஸ் ஓடிக்கொண்டிருந்தபோது இறங்கமுயற்சித்த 70 வயது பாட்டி, தவறி விழுந்து மயக்கம் தெளியாத நிலையில், யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானர்.

அளவெட்டியைச் சேர்ந்த செல்லத்துரை நாகம்மாவின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினர்.

பஸ் அளவெட்டி வீதியில் சென்றுகொண்டிருந்தபோது பஸ்ஸிலிருந்தபாட்டி, ஒரு இளைஞரிடம் மணியை அடிக்குமாறு கூறியதாகவும் இளைஞர் மணியை அடிக்குமுன்னரே பஸ் ஓடிக்கொண்டிருந்தபோது பாட்டி இறங்கமுயற்சித்து கீழே விழுந்து மயக்கமானர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

இரு பஸ் தரிப்பு நிலையங்களுக்கு நடுவில்மயக்கமடைந்த நிலையில் கிடந்த பாட்டியை உறவினர்கள் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்கள் மறுநாள் அவர் ஆஸ்பத்திரியில் மரணமானர்.

பஸ் சாரதியை 500 ரூபா பிணையில்செல்ல அனுமதித்த மரணவிசாரணை அதிகாரி விசாரணையை 24ம் திகதிவரை ஒத்திவைத்தார். (க-உ)

# யாழ். சந்தை வாடகை அதிகரிப்பு: ஜன 31-ல் விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ். நவீன மார்க்கட், கடைகளின் வாடகை 50 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டதை யொட்டி தெரிவிக்கப்பட்ட ஆட்சேபம் பற்றிய விசாரணை இம்மாதம் 31ந்திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

இந்த வாடகை அதிகரிப்பை இலங்கை வணிகர்சங்கம், ஆட்சேபித்திருந்தது.

உள்ளூராட்சி அமைச்சு மேலதிகச் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் முன்னிலையில் இவ் விசாரணை நடைபெறவிருக்கிறது.

இவ்விசாரணைக்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே, சிவஞானம், வணிகர் சங்க யாழ். கிளைத்தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்தமாதம் 17-ந் திகதி நடைபெறவிருந்த விசாரணைக்கு யாழ். விசேட ஆணையாளர் திரு. கே சிவஞானம் செல்லாததினால், விசாரணை 31-ந் திகதிக்குப் பின்போடப்பட்டது (க-உ)


## இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் பயிற்சி நிலையம்

**வகுப்புகள்:-** G.A.Q., G.S.Q., First in Commerce B. A., B. com.

**நடைபெறும் இடங்கள்:-** யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டுநகர்.

**தகைமைகள்:** (I) G. C. E. A/L நான்கு பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும். (II) 25 வயதிற்கு மேற்பட்டோர் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 2-2-78**

**புதிய வகுப்புகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 4-2-78.**

புதிதாக பதிய விரும்பும் மாணவர்கள் பாடங்கள் பற்றிய விபரத்தையும் பதிவு அனுமதிப் பத்திரத்தையும் முத்திரையிட்ட சுயமுகவரி கொண்ட 9'' X 4'' தபால் உறை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர இல 1000,
C/o, ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.


"கல்லூரிகளில்

# பனம்பொருள் உற்பத்திப் பாடத்தின் முக்கியத்துவம்"

## கல்வி அதிகாரி வலியுறுத்து

[உடுப்பிட்டி]

''கல்லூரிகளில் விவசாயம் எவ்வளவு முக்கிய தொழில் முன்னிலைப்பாடமாக அமைந்துள்ளதோ இதே போன்று பனம்பொருள் உற்பத்திப் பாடமும் தமிழ்ப் பிள்ளைகளைப் பொறுத்த வரையில் முக்கியமானது''

இவ்வாறு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் பெற்றார்-ஆசிரியர் சங்கத்தால் நடத்தப்பட்ட வைபவமொன்றில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு வி தங்கராசா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

கல்லூரி அதிபர் திரு சுவாமிநாத சர்மா தலைமை தாங்கினார்

''எமது நாட்டில்விவசாயம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வாறே பனம்பொருள் உற்பத்தியும் முதுகெலும்பாக அமைந்துள்ளது இந்தியாவிலே பனம்பொருள் உற்பத்தி மூலம் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணி சம்பாதிக்கப்பட்டு வருகின்றது குவைத் போன்ற கிழக்கு நாடுகளின் எண்ணைக் கிணறுகளில் பனந்தும்பினாலான தூரிகைகளே பாவிக்கப்பட்டு வருகின்றன குமரப்பாபுரத்தில் பனம்பொருள் உற்பத்தி அளித்துள்ள வெற்றி எமக்கு உற்சாகம் ஊட்டுவதாக உள்ளது

''பனம் பொருள் உற்பத்தி, தொழில் முன்னிலைப்பாடமாக முன்பு இருந்து வந்தது போன்று தொடர்ந்தும் புதிய பாடத்திட்டத்திலும் சேர்க்கப்படவேண்டும்'' என்றும் திரு தங்கராசா கேட்டுக் கொண்டார்

...

# பெரியார் நினைவாக முத்திரை

சென்னை, ஜன 23

ஈ வே ரா பெரியாரின் ஞாபகார்த்தமாக அவரின் பிறந்தின நூற்றாண்டுவிழாவில் தபால் தலை ஒன்றை வெளியிட மத்திய அரசுமுடிவு செய்துள்ளது.

தமிழக முதல்வர் திரு எம். ஜி இராமச்சந்திரனுக்கு இது பற்றி மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. எல். கே. அட்வாணி அறிவித்துள்ளார். [இ]

---

கோப்பாய் எம் பி திரு சி கதிரவேலுப்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்

ஈழநாடு
The Eelanaadu

## சுதந்திர தினக் கொண்டாட்டம்

பெப்ரவரி நான்காந் தேதி நடைபெறும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களிலும், புதிய ஜனாதிபதிப் பதவியேற்பு வைபவங்களிலும் கலந்துகொள்வதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

ஆனால் கடந்த பல வருடங்களில் போன்று ஆர்ப்பாட்டங்களிலோ, பகிஷ்கரிப்புகளிலோ, கறுப்புக் கொடி எதிர்ப்புகளிலோ ஈடுபடுவதில்லையென்றும், இதுபோன்ற நடவடிக்கைகளில் பங்குகொள்வதில்லையென்றும் கூட்டணியின் செயற்குழு செய்துள்ள முடிவு வரவேற்கத்தக்கது.

1948ம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபோது, நாடு முழுவதிலும் அதைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் காந்திஜியின் மறைவுக்கு இங்கு தமிழ்ப் பகுதிகளில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதால் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது போல் அன்று நடைபெற முடியாது போய்விட்டது.

இது முதல் சம்பவம். இதன் பின் தமிழ்மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்படுவதாக ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளவேண்டாமென அரசியல்கட்சிகள் சில விடுத்த வேண்டுகோளை ஏற்றுச் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் தமிழ்மக்கள் உற்சாகத்துடன் பங்கு பற்றுதிருந்துவந்தனர்.

1956ம் ஆண்டில்சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டபின் சுதந்திரதினத்தன்று தமிழ்ப் பகுதிகளில் கடையடைப்பு, கறுப்புக் கொடி, துக்கதினம் என்று எதிர்ப்புக் காட்டப்பட்டு வந்தது.

1972ம் ஆண்டில் இலங்கைக்குப் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு நாடு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டபோதும், அதன் பின்னரும் குடியரசு தினக் கொண்டாட்டங்களையும் பகிஷ்கரித்துக் கறுப்புக்கொடி, கடையடைப்பு என எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுவந்தது.

நாடு சுதந்திரம் பெற்ற பின்பு தமிழ்மக்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வந்ததாலும் அவர்களின் குறைகள் தீர்க்கப்படாததாலும், பின்னர் புதிய அரசியலமைப்பிலும் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படாததாலும் தமிழ்மக்கள் சுதந்திரதின விழாக்களையும், குடியரசு தினக் கொண்டாட்டங்களையும் பகிஷ்கரித்தனர்; தமது அதிருப்தியைத் தெரிவித்தனர்.

இதுவரை ஆட்சிபீடத்திற்கு வந்த கட்சிகளுக்கும், இப்போது ஆட்சிபீடத்திற்கு வந்துள்ள தலைமைக்கும் நிறைய வேறுபாடு உண்டு.

இவ்வருடம் பெப்ரவரி நான்காந்தேதி சுதந்திர தினக் கொண்டாட்டம் மட்டுமல்ல, செயலதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதி பதவியேற்கும் வைபவமும் நடைபெறுகிறது.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கவிருக்கும் இன்றைய பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பதவியேற்பு வைபவம் தொடர்பாக ஆடம்பரக் கொண்டாட்டங்கள் வேண்டாம் என்று கூறியிருக்கிறார்.

இதுமட்டுமல்ல, தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வுகாணப்போவதாகவும், அவர்கள் இந்நாட்டில் சம உரிமையுடன் வாழக்கூடியவாறு அரசியலமைப்பு ரீதியாக உரிமைகள் வழங்கப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார். அரசியலமைப்பில் திருத்தம் செய்வதற்குப் பேரவைத் தெரிவுக்குழு ஒன்றும் ஆராய்ந்துவருகிறது.

தமிழ்மக்களுக்கு உரிமை வழங்குவேன் என்று உறுதி அளித்துள்ள ஒருவர் செயலதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதியாகப் பதவியேற்கிறார்.

அவர், சொன்னபடி செய்கிறாரா என்பதைச் சிறிது பொறுத்திருந்து பார்க்க வேண்டும். சிறிது காலம் இதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும். இதேசமயம் நல்லெண்ணமும் நட்புறவும் காட்டுபவர்களுக்கு ஒத்துழைப்பு அளிப்பது அவசியம்.

எனவே பகிஷ்கரிப்பு, எதிர்ப்பு, ஆர்ப்பாட்டம் என்பவற்றில் கூட்டணி கலந்துகொள்வதில்லைஎன்று செய்துள்ள முடிவு பாராட்டுக்குரியது. இத்துடன் ஜனாதிபதிப் பதவியேற்பு வைபவத்திலும் கூட்டணித் தலைவர்கள் கலந்துகொள்வதென முடிவுசெய்திருந்தால் இன்னும் ஒரு படி மேலான தாக இருக்கும்.

# பண்டத்தரிப்பு-சங்கானை

## பட்டணசபைகள் இணையுமா?

### கி. மு. சங்கம் ஆட்சேபம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பட்டண சபையையும், சங்கானைப் பட்டணசபையையும்ஒருங்கிணைத்து நகரசபையாக தரம் உயர்த்துவதற்குஉள்ளூராட்சி அமைச்சு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுவதையிட்டு பண்டத்தரிப்புக் கிராமமுன்னேற்றச் சங்கம் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

பண்டத்தரிப்புக் கிராம முன்னேற்றச் சங்க நிர்வாகசபைக் கூட்டம் அதன் தலைவர் க. பத்மநாதன் தலைமையில் நடைபெற்றபோது உரையாற்றிய பல அங்கத்தவர்கள் பிரஸ்தாப இணைப்பையும் நகரசபையாக தரம் உயர்த்தப்படுவதையிட்டும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்தத் தர உயர்வால் வரி விகிதங்களும் அதிகரிக்கப்படுமெனவும் இதை இப்பகுதி மக்கள் தாங்கிக்கொள்ள முடியாது எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பியை நேரில் சந்தித்து நிலைமையை விளக்குவதற்காக ஒரு குழு ஒன்றும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

## பாலர் பாடசாலை ஆசிரியர்கள் முறையீடு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பாலர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தினர், தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலத்திடம் தமது வேலை இழப்புப் பற்றி முறையிட்டுள்ளனர்.

அரசாங்கப் பாடசாலைகளில் 5 வயதுப் பிள்ளைகள் அனுமதிக்கப்படுவதை தொடர்ந்து பாலர் பாடசாலைகளில் மாணவர் தொகை குறைவதால் பலர் வேலையை இழக்கவேண்டியிருப்பதாகவும், அரசாங்கம் ஆசிரியர் நியமனத்தின்போது பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு முன்னுரிமையளிக்க வேண்டுமென்றும் பாலர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தினர் திரு. குமார் பொன்னம்பலத்திடம் கேட்டுக்கொண்டனர்.

இது சம்பந்தமாக அடுத்த மாதம் கல்வியமைச்சரை மேற்படி சங்கத்தின் குழுவுடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த ஒழுங்குசெய்வதாகத் திரு. குமார் பொன்னம்பலம் உறுதியளித்தார். [கூ-அ]

## ரியூட்டரிகளில்

# அரசாங்கபாடசாலை அதிபர், ஆசிரியர்

## வித்தியாதிபதி நடவடிக்கை

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களில் கல்வி போதிக்கும் அதிபர்கள் ஆசிரியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வடமாநிலக் கல்வி அதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இவ்விடயமாக சகல வட்டாரக் கல்வி அதிகாரிகளையும் கூடிய கவனம் எடுக்குமாறு வடமாநில கல்வி அதிபதி பணித்துள்ளார்.

பெற்றோர்களிடம் இருந்தும், பல பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் கிடைத்துள்ள பல புகார்களைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## "சிறுபான்மையினர் ஒன்றுதிரள வேண்டும்"

.... ஏ அஸீஸ்

[கொழும்பு]

"சிறுபான்மை மக்களின் சகல உரிமைகளுக்கும் சட்டரீதியான அந்தஸ்து கிடைக்கச் செய்யும்முகமாக இந்நாட்டில் வாழும் சகல சிறுபான்மையினரும் ஒன்றுதிரளவேண்டும்" என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் அரசியல் பிரிவின் சார்பில், பொதுச்செயலாளர் திரு. ஏ. அஸீஸ் சிறுபான்மை இனத் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விசேஷமாக பிரதான சிறுபான்மை இனங்களான தமிழ்-முஸ்லிம் சமூகத்தவரின் பிரதிநிதிகள் ஒவ்வொருமுறையும் மாறி மாறி இந்நாட்டின் உப ஜனாதிபதி பதவியைவகிக்க வாய்ப்பளிக்கவேண்டுமென்ற ஜ. தொ. கா. அரசியல் பிரிவின் கோரிக்கை நிறைவேறத்தக்க சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் சிறுபான்மைத் தலைவர்கள் தம்மை ஈடுபடுத்துதல் அவசியம் என்றும் திரு. அஸீஸ் கோரியுள்ளார்.

தமது இக்கோரிக்கைக்கு ஏற்கனவே சிறுபான்மை சமூகத்தவரின் ஆதரவு மட்டுமல்லாது, திரு. பிறின்ஸ்குணசேகரா தலைமையில் இயங்கும் ஸ்ரீலங்கா விமுக்தி பலவேகயவினதும் பேராதரவுமுண்டு. எனவே இக் கோரிக்கை நாடாளுமன்ற அரசியலமைப்பு தெரிவுக்குழுவினதும் அரசாங்கத்தினதும் கவனத்தை ஈர்த்து, அதன் விளைவாக அனுகூலமான முடிவு ஏற்படச் செய்யுமுகமாக சிறுபான்மை சமூகத்தினர் ஒரே சக்தியாக இணைந்து ஒரே குரலில் இக் கோரிக்கையை வலியுறுத்துதல் அவசியமாகும் என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார். [உ]

## விலை அதிகம்?

(சங்கானை)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயக்கி வரும்விவசாயவிற்பனை நிலையத்தில் யூறியா, ரி. டி. எம். போன்ற உர வகைகள் தனியார் ஸ்தாபனங்களில் விற்பனையாகும் விலையைவிட கூடுதலான விலைக்கு விற்கப்படுகின்றனவாம்.

இதனால் விவசாய விற்பனை நிலையத்திற்கு உரவகைகளைப் பெறச்செல்லும் விவசாயிகள் தனியார் வியாபாரிகளை நாடுகின்றனராம். (உ)

## கிளிநொச்சியில்

## மிளகாய் உற்பத்தி சோர்வு

[உருத்திரபுரம்]

கிளிநொச்சிச் சந்தையில் தற்போது மிளகாயின் விலை உயர்ந்து வருகிறது. கடந்த வாரம் மிளகாய் ரூத்தல் பத்து ரூபா முதல் பதினொரு ரூபா வரை வியாபாரிகள் கொள்வனவு செய்துவருகிறார்கள்.

தற்போது விவசாயிகளிடம் சென்ற வருட மிளகாய் இருப்பு இராததே இவ்விலையுயர்வுக்குக் காரணமாகும். மிளகாயின் விலை இறங்கும் என்ற அச்சத்தினால் விவசாயிகள் தாங்கள் வைத்திருந்த மிளகாய்களை ஏற்கனவே விற்றுவிட்டனர் இதனால் தற்போது விற்பதற்காக சந்தைக்கு மிளகாய் கொண்டு வருபவர்களின் தொகை வெகுவாக குறைந்துவருகிறது

அரசாங்கம் வெளிநாட்டில் இருந்து மிளகாயை இறக்குமதி செய்திருந்தபோதிலும் அவை பாவனைக்கு வருமுன் மிளகாயின் விலை இன்னும் உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுமட்டுமன்றி மற்றைய வருடங்களிலும் பார்க்க இவ்வருடம் மிளகாய்செய்வதிலும் சில விவசாயிகள் சோர்வடைந்துள்ளனர்.

அரசாங்கம் மிளகாயை இறக்குமதிசெய்வதாலும் மிளகாயின்விலை அடுத்த வருடங்களில் குறைந்துவிடலாம் என்பதாலும் சில விவசாயிகள் மிளகாய் செய்வதில் பின்வாங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. [அ]

## மணிவாக்கு

பாம்பு இல்லாத வீட்டிலும் பாம்பு கொன்றவன் வீட்டிலும் சுகமாகத் தூங்கலாம். பாம்பைப் பார்த்த பிறகு அது தப்பியோடிய வீட்டில் தூக்கம் எப்படி வரும்

— பஞ்சதந்திரம்

## நாடும் நடப்பும்

கரவெட்டிப் பகுதியிலிருந்து ஓர் அன்பர் எழுதியுள்ள கடிதத்தை இங்கு தருகிறேன். கடிதம் இதுதான்:-

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலுள்ள எனது பெரிய தாயார் வீட்டில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதனை உங்கள் பத்திரிகை மூலம் எல்லாருக்கும் அறிவித்தால் உதவியாய்இருக்கும் எனும் நோக்குடன் இதனை எழுதுகிறேன். 'நாடும் நடப்பும்' பகுதியில் சேர்த்துக்கொள்ள முடியுமெனின்சேர்க்கவும்.

அன்று காலை ஒரு மனிதர் மிகவும் மிடுக்காக உடுத்துக்கொண்டு வந்து, தன்னை அறிமுகம் செய்து, தனது அடையாள அட்டைகள், கடிதங்கள் போன்றவை எல்லாம் அடங்கிய 'பைலை' எனது பெரியதாயாருக்குக் காட்டி, 12 வருடங்களுக்கு முன்னர் காலஞ்சென்ற எங்கள் பெரிய தந்தையார்தான் தனக்கு உத்தியோகம் எடுத்துத் தந்ததாகக்கூறி, தான் ஆசனத்தில் அமரமுன்னர் அவரது படத்தைப்பார்த்து வணங்கிவிட்டுத்தான் அமரவேண்டுமென்று மன்றாட்டமாகக் கேட்டார். பெரியதாயார் அவரை வீட்டு மண்டபத்துள் அழைத்துச் சென்று படத்தைக் காட்டியபோது அம்மனிதர் கேவிக்கேவி அழுதார். பின்னர் தன் ஆசனத்தில் அமர்ந்து, நிறையக் கதைகள்கூறி, பெரிய தந்தையின் நினைவாக தமக்கு ஏதும் தரும்படி கேட்டார். அவரின் நினைவாக தான்அன்னதானம் கொடுக்கப்போவதாகவும், அதற்குப் பணம் தரும்படியும் கேட்டார். அவரின் நூல்களைத்தரும்படியும், தான் படித்துவிட்டுத் தருவதாகவும் கூறினார்.

பெரியதாயார் அவசரகாரியமாக இருந்தமையால் பணத்தை மட்டும் கொடுத்து அனுப்பிவிட்டார். அன்று மாலைதான அறிந்தோம் - அதே நபர் வேறு ஒருசில வீடுகளிலும் சென்று இவ்வாறு ஏமாற்றிப் பொருள்கள் பெற்றுச் சென்றுள்ளார் என்று. ஆகவே வீடுகளில் தனியே இருப்பவர்களுக்கு இதுஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும்.

இந்நபர் வீட்டு அடையாளங்களைப் பார்த்து ஒருகொள்ளைக் கூட்டத்திற்கு உதவுபவராகவும் இருக்கலாம் அல்லவா?

எனது பெயரை பத்திரிகையில் எக்காரணத்தையிட்டும் பிரசுரிக்கவேண்டாம் என தற்பாதுகாப்புக்கருதி தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

0 0 0

மோசடிகள் பலவிதம்; ஜாக்கிரதை!

0 0 0

யாழ்ப்பாணநகரில் உயர்ந்து நிற்கும் மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றி அழகாகவும் வாகனப் போக்குவரத்துக்கு வசதியாகவும் கறுப்பு வெள்ளை மை பூசி சிறியதூண்கள் முக்கோண வடிவு மேடையில் அமைக்கப்பட்டிருந்தது. சிறிது காலத்துக்குமுன் இச் சிறிய தூண்களில் சிலவற்றையாரோ இடித்துத் தள்ளிவிட்டனர். மாநகரசபை மீண்டும் அவற்றைக் கட்டியது

இட்போது மீண்டும் அவை இடித்துத்தள்ளப்பட்டுள்ளன. ஏன் இந்த விஷமத்தனம்? இதனால் யாருக்கு நன்மை?

# எகிப்து-இஸ்ரேல் அமைதிப்பேச்சுக்கள் 10 நாட்களில் ஆரம்பமாகும்

## அமெரிக்கா மீண்டும் நம்பிக்கை

வாஷிங்டன்,ஜன.23

மத்தியகிழக்கு அமைதி குறித்து எகிப்து - இஸ்ரேலியப் பேச்சுவார்த்தைகள் இன்னும் பத்து நாட்களுக்குள் மீண்டும் ஜெருசலத்தில் ஆரம்பமாகும் என அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் திரு.சைரஸ்வான்ஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் ஜெருசலத்தில் எகிப்து-இஸ்ரேலியபேச்சுவார்த்தைகள் முறிவுற்ற போது திரு. வான்ஸ் ஜெருசலத்திலேயே தங்கியிருந்தார். பின்னர் இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின், எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத் ஆகியோருடன் இப்பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டுமென்று வற்புறுத்திய பின்னர் திரு. வான்ஸ் வாஷிங்டன் திரும்பியுள்ளார்.

### இராணுவப் பேச்சுவார்த்தை

ஜெருசலப் பேச்சுவார்த்தைகள் இப்போதைக்கு ஆரம்பிக்கப்படமாட்டாது என்று திரு. பெகினும் ஜனுப் சதாத்தும் அறிவித்துள்ள அதேவேளையில் கெய்ரோவில் இரு நாட்டு இராணுவ அதிகாரிகளுக்கும் இடையே இன்று அல்லது நாளை பேச்சுவார்த்தைகள் நடைபெறுமென்று கெய்ரோ செய்திகள் தெரிவிக்கின்றன.

## பேச்சுக்களில் கலந்துகொள்ள ஜோர்டான் நிபந்தனையுடன் இணக்கம்

இதேவேளையில் மத்திய கிழக்கு அமைதிகுறித்து இஸ்ரேல்-எகிப்து பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள ஜோர்டான் விருப்பம் தெரிவித்துள்ளது.

தமது விருப்பத்துடன் ஜோர்டான் மன்னர் ஹுசேன் சில நிபந்தனைகளையும் விதித்துள்ளார்.

ஃ கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும.

ஃ கிழக்கு ஜோர்டானில் அரபுமக்களுக்கு சகல உரிமைகளும் வழங்கப்படவேண்டும்.

ஃ இஸ்ரேலிலுள்ள அரபு மக்கள் அரபு நாடுகளுக்குத் திரும்ப அனுமதி வழங்கப்படவேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் இணங்குமானல் ஜோர்டானும் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் என்று மன்னர் ஹுசேன் தெரிவித்துள்ளார். (இ)

## ஷேக் அப்துல்லா மூன்றரை லட்சம் உதவி

புதுடில்லி, ஜன. 23

ஆந்திர பிரதேசம், லட்சதிவுகள் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புயல், வெள்ள நிவாரணப் பணிகளுக்கு ஜம்மு-காஷ்மீர் முதன்மந்திரி ஷேக் அப்துல்லா 3 லட்சத்து 62 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை] ஷேக் அப்துல்லா நேற்று நேரில் சந்தித்து இந்த அன்பளிப்பை வழங்கினர். [இ]

## வெளிநாடு செல்வார்

[அரியாலை]

யாழ்ப்பாணம் பண்ணை காசநோய் வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரியும், காசநோய் நிபுணருமான வைத்திய கலாநிதி எஸ். மகேந்திரன் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

விரைவில் வெளிநாடொன்றில் உயர்ந்த பதவியொன்றைப் பெற்றுச் செல்லவிருக்கும் இவர், இலங்கைக் கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் தலைவராகவும், யாழ் ரோட்டரிக்கழகத்தின் உபதலைவராகவும் பணியாற்றிய சிறந்த சமூகசேவையாளர் ஆவார் (க)

## கர்நாடகம், ஆந்திரா, மகாராஷ்டிரா

# சட்டசபை தேர்தல்களில் அஇஅதிமுக போட்டியிடும்

## உடன்பாடு பற்றி முடிவு செய்ய எம். ஜி. ஆருக்கு அதிகாரம்

சென்னை, ஜன.23

கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், மகராஷ்டிரா சட்டசபை தேர்தலில் அனைத்திந்திய அண்ணு திராவிடமுன்னேற்றக்கழகமும்போட்டியிட முடிவு செய்துளளது.

கட்சியின் செயற்குழு நேற்றுக்கூடி இவ்வாறு முடிவு செய்தது.

இத்தேர்தலில் மற்றைய கட்சிகளுடன் உடன்பாடு செய்யும் பொறுப்பை கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரனிடம் செயற்குழு ஒப்படைத்துள்ளது.

போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கை, வேட்பாளர் தொகை பற்றி முடிவு செய்யும் அதிகாரமும் திரு எம்.ஜி.ஆரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. [இ]

### கர்நாடக தேர்தல்:

# தி.மு.க.-ஜனதா உறவில் முட்டுக்கட்டை

சென்னை, ஜன.23

கர்நாடக சட்டசபைத்தேர்தலில் தி.மு.க வுக்கு ஒரு தொகுதி மட்டுமே கொடுக்கப்படுமானல் ஜனதா கட்சிக்கும் தி.மு.க.வுக்கும் இடையே தேர்தல் உடன்பாடு ஏற்படமாட்டாது என்று தி.மு.க. தலைவர் திரு. மு. கருணநிதி தெரிவித்துள்ளார்.

தி மு க-ஜனதா தேர்தல் உடன்பாடு ஏற்படும் பட்சத்தில் தி மு கவுக்கு ஒருதொகுதி மட்டுமே ஒதுக்கப்படும் என ஜனதா கட்சியின் பொதுக் காரியதரிசி திரு. கெக்கடே அண்மையில் தெரிவித்ததைத் தொடர்ந்து திரு. கருணநிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி உயர்மட்ட பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும் திரு.கருணநிதி கூறினர். [இ]

# ஜனதா கட்சிக்கு நல்ல எதிர்காலம் இல்லை

## — பம்பாயில் சவான்

பம்பாய், ஜன. 23

''வலதுசாரிக்கட்சியான ஜனதா கட்சிக்கு நல்ல எதிர் காலம் கிடையாது. அது விரைவில் அழிந்துவிடும்.''

இவ்வாறு இந்திய எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவான் பம்பாயில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஜனதாக் கட்சி நிலைத்து நிற்காது என்பதற்கு பல விஷயங்களில் அதன் தலைவர்கள் ஒத்துப்போவதில்லை என்ற ஒன்றே போதுமான உதாரணமாகும்.

''ஜனதாகட்சியுடன் காங்கிரஸ் உறவு கொண்டுள்ளது என்பது அர்த்தமற்ற வதந்தியே ஆகும். காங்கிரஸ் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகவே இருக்க விரும்புகிறது. அது தொடர்ந்து எதிர்க்கட்சியாகவும் இருக்காது.'' (இ)

# மாதிரிப் பாடசாலையாக கிளிநொச்சி ம. வி.

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி மகாவித்தியாலயம் மாதிரிப் பாடசாலையாகவும், கரடிப்போக்கில் அமைந்துள்ள புனித திரேசா பாடசாலை பெண்கள் பாடசாலையாகவும் அமையவுள்ளது.

இவ்விஷயமாகக் கல்வி அமைச்சுடன் கிளிநொச்சி எம்.பி. திரு.வி. ஆனந்தசங்கரி தொடர்புகொண்டு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளார்

கிளிநொச்சித் தொகுதியிலேயே ஒரேயொரு மாதிரிப் பாடசாலையாக அமையவிருந்தும் மகாவித்தியாலயத்தில் முதலாம் வகுப்பிலிருந்து க. பொ. த. உயர்தரம்வரை சகல வகுப்புக்களும் இடம்பெறும்.

இவ்வகுப்புக்கள் நடைபெறுவதற்கான இடவசதிகளின் பொருட்டு தற்போது இ.போ.ச. டிப்போவுக்கு அருகாமையில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள மகாவித்தியாலயத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. [அ]

# ''சிறு கைத்தொழில்களில் மங்கையர் ஈடுபடவேண்டும்''

## மூளாயில் 'அமிர்' கோரிக்கை

(சுழிபுரம்)

''ஆண்கள்மட்டும் உழைத்து நன்கு வாழ்ந்த காலம் ஒன்று முன்பு இருந்தது உண்மை. இன்று அந்த நிலைமை மாறி ஆண்களும் பெண்களும் உழைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு ஒருபுறம், அரசின் பொருளாதார நெருக்கடி மறுபுறமும் எம்மவரை வாட்டுகின்றன. அரிசிப்பங்கீட்டு வெட்டினுலும் மேலும் பெரிய பளு யாவருக்கும் ஏற்படவுள்ளது. இவ்வேளையில் ஒருவர் மட்டும் உழைத்து வாழ்வை எவ்வாறு சமாளிக்கமுடியும் என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும்'' வீட்டுப் பணியுடன் பெண்கள் வருவாய் தரக்கூடிய சிறுதொழில்களை தங்களால் முடிந்தவரை செய்யவேண்டும்''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மூளாய் திரு. இ. தம்மையா இல்லத்தில் நடைபெற்ற விஜயன் தையல்கலை மன்றம் திறப்புவிழாவிற்கு தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தையல் கலை மன்றத்தை திறந்துவைத்தார்.

தையல்நுட்ப பொருட்காட்சியை திருமதி தா. திருநாவுக்கரசு திறந்துவைத்தார். திரு. திருநாவுக்கரசு எம். பி. விற்பனையை ஆரம்பித்துவைத்தார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், ''வீட்டில் இருக்கும் இளம்பெண்களுக்கு நல்வாழ்வு ஏற்பட இன்று ஆரம்பிக்கப்படும் தையல்மன்றங்கள் பெரும் உதவியாக விளங்கும். யாவரும் இதற்கு ஆதரவு நல்கவேண்டும் என்ருர்.

வட்டுக்கோட்டை தேசிய பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில், வட்டுக்கோட்டைத் தொகுதி இன்று இரட்டை அங்கத்தவர் தொகுதியாக விளங்குகின்றது. இதனுல் மக்கள் யாவரும் கூடிய பயனைப் பெற்றுக் கொள்ளலாம். நான் திட்டமிட்டுள்ள கைத்தொழில்கள் யாவும் இவ்வாண்டுக்குள் ஆரம்பிக்கப்பட்டுவிடும். இலங்கைவங்கி தாராளமாக பணவசதிசெய்ய முன்வந்துள்ளது. இவற்றை நம்மவர் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வட்டுக்கோட்டைத் தொகுதியில் எனது திட்டத்திற்கமைய ஆரம்பிக்கப்படும் தொழில்நிலையத்தில் இதுவும் ஒன்ருகும்'' என்ருர். (உ)

## இந்தக் கட்டிடத்தின் நிலை

[வவுனியா]

பல்லாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வவுனியா அரசாங்க எழுதுவினைஞர் சங்கக் கட்டிடம், வருடக்கணக்காகப் பூரணப்படுத்தப் படாதாத நிலையிலேயே இருக்கிறது.

இதில் இப்போது பிச்சைக்காரர்களும், நாடோடிகளுமே குடியிருக்கிருர்களாம். [உ]

## 20வருடச் சிறைக் கைதி தப்பியோட்டம்

[எம்பிலிப்பிட்டிய]

எம்பிலிப்பிட்டியாவில் 20 வருடச் சிறைக் கைதி ஒருவர் சிறைக் காவலிலிருந்து தப்பி ஓடிவிட்டார்.

23 வயதான இவர் 5 அடி 5 அங்குல உயரமானவர். ரணசிங்கலாமே பியசேன என்பது இவரது பெயர்.

# ''குடும்பவருமானத்தை அதிகரிக்க பெண்கள் பாடுபடவேண்டும்''

(அரியாலை)

''பிள்ளைகளைப் பெற்றுவளர்ப்பது மட்டும் பெண்களின் கடமைகளல்ல. தங்கள் கணவனேடு சேர்ந்து சந்தோஷகரமான குடும்பவாழ்க்கையை ஆக்கிக்கொள்வதும் அவர்களது கடமையாகும். கணவனைப் பேணுவதிலும் பிள்ளைகளைச் சிறந்தமுறையில் வளர்ப்பதிலும் போதிய கவனம் செலுத்தவேண்டிய பெண்கள், தமது குடும்ப வருமானத்தைப் பெருக்க ஏதாவது சிறு தொழிலை மேற்கொள்வது நல்லதாகும்''.

அரியாலை மேற்கு காந்தி சனசமூகவெள்ளிவிழா அரங்கில் தும்புத்தொழில்நிலையமொன்றை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்த கொழும்பு இளம் கிறீஸ்த பெண்கள் இயக்கப் பிரதிநிதி திருமதி கோடிம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். இளம் கிறீஸ்தபெண்கள் இயக்கத்தலைவி திருமதி யேசுதாசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் திருமதி கோடிப்பிள்ளை தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது: ''இப்பகுதியில் வறிய நிலையில் வாழும் பெண்களுக்கு சிறு வருவாயைத் தேடிக்கொடுக்கக்கூடியதாக இத்தொழிலை ஆரம்பித்துள்ளோம். இத் தும்புத்தொழில் நிலையத்தில் குடும்பப்பெண்

[5-ம் பக்கம் பார்க்க]



# "யு. என். பி. அமைப்பாளர்களின் முறைகேடான செயல்களை நிறுத்த நடவடிக்கை எடுங்கள்"

## பிரதமருக்கு பண்டிதர் கடிதம்

[யாழ்ப்பாணம்]

"ஐக்கியதேசியக்கட்சியின் மதிப்பைக் காப்பாற்றும்வகையில் தமிழ்ப்பகுதியில் உள்ள ஐக்கியதேசியக்கட்சி அமைப்பாளர்களின் ஊழல்களையும் முறைகேடான செயல்களையும் நிறுத்த நடவடிக்கை எடுங்கள்"

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் கோரியிருக்கிறார்.

இக் கடிதத்தில் அவர்மேலும் கூறியிருப்பதாவது:

"24-11-77ல் தேசியஅரசுப் பேரவை சிற்றுண்டிச்சாலையில் எனக்கும் எமது கட்சி எம். பிக்கள் சிலருக்கும் 'சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் செயற்பட்டதுபோல் தமிழ்ப் பகுதிகளில் ஐ. தே. க. அமைப்பாளர்கள் செயற்பட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று கூறியிருந்தீர்கள். தமிழ்ப்பகுதி ப. நோ. கூ. சங்க இயக்குநர்களை நியமிக்கும் அதிகாரமும் தமிழ் எம். பிக்களுக்கேவழங்கப்படும் என்றும் அவ்வேளை தெரிவித்தீர்கள். அதனை நிறைவேற்றியும் இருக்கிறீர்கள்.

இப்போது தம்மை ஐதேக அமைப்பாளர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலர் கடந்தகால சுதந்திரக்கட்சி அமைப்பாளர்கள் போலவே நகைப்புக்கிடமாக நடந்துகொள்கிறார்கள்.

அரசாங்க செல்வாக்கைப் பயன்படுத்தி ஆசிரியர் இடமாற்றங்களில் இவர்கள் தலையிடுகின்றனர்.

இதுதான் தர்மிஷ்ட அரசின் கொள்கையா என்று மக்கள் கேட்கிறார்கள்.

இத்தகைய நிலைநீங்க நடவடிக்கை எடுங்கள்". [உ]

## சிரமதானப் பணி

[அரியாலை]

இளம் பெண்கள் கிறீஸ்தவ இயக்கத்தினரால் வழங்கப்பட்ட நிதியுதவியைக்கொண்டு மலகூடமில்லாத குடும்பங்களுக்கு குழிமலகூடம் அமைத்துக்கொடுக்கும் பணியை அரியாலை மேற்கு சனசமூகநிலைய நிர்வாகிகள் மேற்கொண்டுள்ளனர்.

மலகூடம் அமைக்கும் வேலைகளைக் கிராம மக்கள் சிரமதானம் மூலம் செய்துவருகின்றனர். [க]

....

## உதைபந்தாட்டம் 'பாடும்மீன்' சாம்பியன்

[யாழ்ப்பாணம்]

அமரர் துரையப்பா ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தை குருநகர் பாடும்மீன் கழகம் தட்டிக் கொண்டது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் நடைபெற்ற இப் போட்டியில், 'ஏ' பிரிவு ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் கழகம் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்தை 3-2 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. கே. கிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.

'பி' பிரிவு ஆட்டத்தில் சன்றைஸ் விளையாட்டுக் கழகம் பாடும்மீன் கழகத்தை 'பெனல்டி' புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. எஸ். பிலேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார். வெற்றி பெற்ற கழகங்களுக்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் பரிசில்களை வழங்கினார். [கெ]

## குடும்ப...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் கல்விகற்று வேலைவாய்ப்பின்றியிருக்கும் இளம்பெண்களும் போதிய பயிற்சியைப் பெற்று இத் தொழில் மூலம் சிறுவருவாயைத் தேடிக்கொள்வதுடன் தமது வீட்டுத் தேவைக்கு வேண்டிய பொருட்களையும் உற்பத்தி செய்து கொள்ளமுடியும். போதிய பயிற்சியைப் பெற்றபின்னர் வீடுகளில் சும்மா காலத்தை கழிக்காமல் இத் தொழிலை குடிசைத் தொழிலாக மேற்கொள்வது சாலச்சிறந்தது. இப் பகுதியில் வாழும் பெண்களின் நல்வாழ்வுக்காக எமது இயக்கம் வேண்டிய உதவிகளை எப்பொழுதும் செய்ய ஆயத்தமாக இருக்கிறது." [க]

## கல்லூரி அதிபர் இடமாற்றம்: காரைநகரில் பதற்றம்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் இடமாற்றம்செய்யப்பட்டதையடுத்து காரைநகரில் பதற்றநிலை உருவாகியுள்ளது.

இக் கல்லூரி அதிபர் திரு. கே. கே. நடராசா இம்மாதம் முதலாம் திகதி அனலைதீவு மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்டிருந்தார் இதேநேரம் அனலைதீவு மகா வித்தியாலய அதிபர் காரைநகர் இந்துக்கல்லூரிக்கு மாற்றம்பெற்றுள்ளார். எனினும் காரைநகர் இந்துவுக்கு அனலைதீவிலிருந்து புதிய அதிபர் வரவில்லை, இருந்தபோதிலும் காரைநகர் இந்து அதிபர் திரு நடராசா வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு உதவிஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார், இதனை ஆட்சேபித்து ஆசிரியர்குழுவொன்றும் பெற்றோர் சிலரும் வட்டுக்கோட்டை எம் பி திரு தா திருநாவுக்கரசுவையும் எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கத்தையும் சந்தித்ததாகத் தெரிகிறது. ஆயினும் இதுவரையும் கல்லூரி அதிபரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்படவில்லை என அறியப்படுகிறது. கடந்த வருடங்களில் இக்கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர்சங்கம் செயல்படாமையே இச் சிக்கலுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது இப் பிரச்சினை தொடர்பாகப் பிரதமருடன் தொடர்புகொள்ளப்பட்டுள்ளது. (உரு, நி அ)

## வர்த்தகப் பட்டதாரிகள் சங்கம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை வர்த்தகப் பட்டதாரிகள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் யாழ். சட்ட நிலைய விரிவுரை மண்டபத்தில் திரு. எஸ். உலகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

பின்வருவோர் சங்க நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஜே. யேசுதாசன், கௌரவ செயலாளர்: திரு. எஸ். உலகநாதன், தனாதிகாரி: திரு, என். மரியாம்பிள்ளை.

ஐவர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [கா]

......

## நிர்வாகிகள்

(இமையாணன்)

உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. கே. குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: இ. வ. செல்வரத்தினம், உப தலைவர்: கே. குணசிங்கம், இணைச்செயலாளர்கள் வே. செல்லத்துரை, சு. சிவநேசலிங்கம், பொருளாளர்: கி. கோபாலு, உதவிப் பொருளாளர்: வ. சிவரத்தினம்.

9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

...

## புனரமைப்பு

(நெல்லியடி)

உடுப்பிட்டித் தொகுதியில் இளைஞர்பேரவை அமைப்புக்கள் விரைவில் புனரமைக்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை உடுப்பிட்டித் தொகுதி இளைஞர்பேரவை அமைப்பாளர் திரு. எஸ். செந்துராசா மேற்கொண்டு வருகிறார். (உ)

......

## இடமாற்றம் பின்போடப்பட்டது

[வண்ணார்பண்ணை]

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய திரு. த. ஜெயதேவனின் இடமாற்றம் ஏப்ரல் வரை நிறுத்தப்பட்டுள்ளது.

இம்மாதம் 1ந் தேதி முதல் திரு. ஜெயதேவன் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். ரஸிக ரஞ்சன் சபாவின் 27-வது ஆண்டு விழாவின் இன்றைய நிகழ்ச்சிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. கி. சிவனேசன் தலைமைதாங்குகிறார்.

இன்றைய நிகழ்ச்சிகளில் திருமதி சௌபாக்கிய லெட்சுமி சிவஞானம், திருவாளர்கள் எஸ். பரமசாமி, எஸ். கணபதிப்பிள்ளையின் பாட்டுக் கச்சேரிகள் இடம் பெறும் சங்கீத கல்லூரி 4, 5 ம் வகுப்பு மாணவர்களின் மிருதங்க இசையும் இடம்பெறும். [கெ]

## மீண்டும் சேவை நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றிருந்த திரு. ஏ. எம். ஸ்பென்ஸர் மீண்டும் அதிபரானார்.

கடந்த அரசாங்கத்தின் போது சென்ற ஆண்டு இறுதியில் ஓய்வு பெற்ற இவர் மீண்டும் தற்போதைய அரசாங்கத்தினால் சேவை நீடிப்பு வழங்கப்பட்டு விக்டோரியாக் கல்லூரியின் அதிபர் பதவியை பொறுப்பேற்றுள்ளார்.

[உரு நி -அ]

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
சுஜாதா-முத்துராமன்
வாழ்ந்து காட்டுகிறேன்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30.
சரஸ்வதி சபதம்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர் -ஜெயலலிதா
அரச கட்டளை

மனோகரா
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். -சரோஜாதேவி
பணக்கார குடும்பம்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம். எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர், வாணிஸ்ரீ, நாகேஷ் நடித்த
"அவசரக் கல்யாணம்"
(புதிய பிரதி)
இத்துடன் அமரர் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரைக் காட்சியும் காண்பிக்கப்படும்.
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு!

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

ராணி (யாழ். நகர்)
வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் —ஜெனிட்டா நடித்த
தினசரி 4 காட்சிகள்
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது 2வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆரின் அரசிளங்குமரி (புத்தம்) புதியபிரதி
... சிறுவர்களுக்கான படக் காட்சி ..
பிரதி சனியும் ஞாயிறும் காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்.
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
28-1-78 சனியும் 29-1-78 ஞாயிறும் காலை 8-30 மணிக்கு
ROBINSON CRUSOE
[சினிமாஸ்கோப்—ஆங்கிலம்]
[பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்]

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 & 9-30 p. m.
SEAN CONNERY
in
"SHALAKO"
Color Scope Action

27-1-78 முதல்
தினசரி 2-30, 6-30 இரவு 9-45 மணிக்கும்
ரவிச்சந்திரன் காஞ்சனா நாகேஷ் நடித்த
உத்தரவின்றி உள்ளேவா
புத்தம் புதிய கொப்பி (கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
மூத்தான முத்தல்லவோ

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

RIO Daily 4 Shows
Last Day
Walter Defends Sarajevo
Tomorrow
V.J. ROBBERY

# "1977 ஆகஸ்ட் கலவரத்தில் 350 பேர் பலி; 150 பேரைக் காணவில்லை!"

## புனர்வாழ்வு கழக தலைவர் தகவல்

[யாழ்ப்பாணம்]

"1958ல் ஏற்பட்ட இனக் கலவரத்தின் பின்னர்- இருபது ஆண்டுகளுக்குப்பின்னர்- மீண்டும் இனக்கலவரம் தலைதூக்கியது இக்கலவரத்தில் 350பேர் பலியாளுர்கள். 150 பேர் பற்றிய விபரங்கள் இல்லை. பல நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டனர். இச்செயல் மிருகத்தனத்திலும் மோசமானது" என்று தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா தெரிவித்துள்ளார்.

திரு. க. கிருஷ்ணனந்தசிவத்தின் "தலைமுறை தந்த தலைமகன்" நூல்வெளியிட்டுவிழா விற்குத் தலைமைவகித்து உரையாற்றுகையிலேயே திரு. நித்தியானந்தாமேற்கண்டகருத்தை வெளியிட்டார்.

யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசுகையில் கூறியதாவது:

"பேராதனையில், தமிழர் இனம் பாரம்பரிய முறையில் வாழ புண்ணியதலமொன்று இல்லாதகுறையை நீக்க, பிறர் மெச்சத்தக்க வகையில், குறிஞ்சிக்குமரன் கோவிலை அமைத்த பெருமை பேராசிரியர் பே. கனகசபாபதியையே சாரும். அவர் இன்று இருந்திருந்தால் தான் முன்னின்று கட்டிய கோயில்எவ்வாறுஇன்றுகிதைந்துள்ளது என்று கண்டு மனம் நொந்திருப்பார்.

"விளம்பரத்தை விரும்பாத பேராசிரியர் பே கனகசபாபதி முதலாவது யாழ்ப்பாண வளாக விஞ்ஞானபீடத் தலைவராகத் திகழ்ந்தார். அவரின் அயராத இந்த உழைப்பினுல் தன் உயிரையும் இழந்தார். விஞ்ஞானத்துறையில் தமிழர் மேம்பட்டு விளங்க வேண்டும் என்பதற்காக பாடுபட்டார். பேராசிரியர் பே. கனகசபாபதி தாய்மொழியில் விஞ்ஞானம் படிப்பிக்க வேண்டுமென்பதில் முக்கியமாக உழைத்தவர்.

"இன்று ஊற்று நிறுவனம் தமிழர் பிரச்னைகளுக்குத் தீர்வு தேட பல ஆலோசனைக் கூட்டங்களை நடாத்துகின்றது. இந்த நிறுவனத்தை நிறுவிய பெருமையும் அவரையே சார்ந்தது. அவர் தனக்குப்பின் தன் பணி தொடர நண்பர் திரு க கிருஷ்ணனந்தசிவம் போன்ற பல இளந் தலைமுறைகளையும் விட்டுச் சென்றுள்ளார்'

"இன்று ஈழம் வேண்டுமென்று பல தலைவர்கள் பேசுகின்றர்கள். ஆனுல் அந்தத் தலைவர்களின் பிள்ளைகளோ பிற வளாகங்களிலிருந்துதமிழ் மாணவர்கள் யாழ்ப்பாண வளாகத்துக்குவந்துபடிப்பைத் தொடர, எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம் உதவியுள்ள போதிலும், வெளி வளாகங்களில் படிக்கவே விரும்புகின்றனர். நான் அவர்களிடம் இதைப்பற்றிக் கேட்டபோது யாழ்ப்பாணத்திலேயே பிள்ளைகளைப் படிப்பிப்பதால் பாடசாலைக்கும் பல்கலைக்கழகத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விடுமென்று சொன்னர்கள். இவற்றிலிருந்து தமிழ்மக்களுக்கு விழுந்த அடிபோதாது என்று நான் கருதுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் அ சின்னத்தம்பி "தலைமுறை தந்த தலைமகன்" என்ற நூலை வெளியிட்டார். முதல் பிரதியை டாக்டர் என் நடேசன் பெற்றுக்கொண்டார். நூலை வெளியிட்டு உரைநிகழ்த்திய பேராசிரியர் சின்னத்தம்பி பேசுகையில், பேராசிரியர் பே கனகசபாபதி தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தில் பங்குபற்றியவராகவும், 1956ம் ஆண்டு தமிழ் மொழியை எத்தெந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கையில் கையெழுத்திட்ட ஒருவராகவும்விளங்கினுர் என்று குறிப்பிட்டார்.

திரு கே சி நித்தியானந்தா உரையாற்றுகையில், "இந்த ஆட்சி வடகிழக்கு பிரதேசத்தில் மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்கும்இடையில் கும்புக்கன் ஓயாத்திட்டம், மறுவவேவதிட்டம், நான்ஓயா திட்டம் போன்ற பலகுடியேற்றங்களை நிறுவி குடியேற்றிவருகின்றது இதனுல் தமிழர் வாழும் பிரதேசங்கள் பறிபோகின்றன என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர் கா இந்திரபாலா பேசுகையில், "யாழ்ப்பாண வளாகத்தில் கட்டப்பட்டுவரும் விஞ்ஞானபீடக் கட்டிடத்துக்கு பேராசிரியர் பே கனகசபாபதியின்பெயரை வைக்க மாணவர்கள் விரும்புகின்றனர். அதனையே நானும் விரும்புகின்றேன். இதுவே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாக அமையும்" என்று குறிப்பிட்டார். (க)

## கைதடி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் ஸ்தலத்திலும், யாழ் ஆஸ்பத்திரியிலும் மரண விசாரணையை நடத்திஞர். பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

இவ்விபத்து நடந்ததைத் தொடர்ந்து நேற்று நண்பகல் வரை சகல வாகனப் போக்குவரத்தும் கைதடியிலிருந்து சாவகச்சேரிவரை தடைப்பட்டது. தனங்கிளப்பு, நாவற்குழி ஊடாக போக்கு வரத்து நடைபெற்றது. [மட்டு நிரு.]

(1ம் பக்கத் தொடர்ச்சி]

சுயாட்சிக்கழக தலைவர் திரு வ நவரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு கோடீஸ்வரன் மேலும் கூறியதாவது: 'கடந்த தேர்தலின் போது திருக்கோணமலையில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்ருல், அங்கு சுதந்திரவர்த்தக வலயம் அமைக்கப்படும் என்று பிரசாரம் செய்யப்பட்டது. இதன் காரணமாக அத்தொகுதியில் சுயாட்சிக் கழக சார்பில் போட்டியிடவிருந்த நான், தமிழர் கூட்டணி அத்தொகுதியில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக வாபஸ் பெற்றேன்.

திருகோணமலையிலுள்ள அல்லை, கந்தளாய் போன்ற குடியேற்றத் திட்டங்களிலும் சிங்களவர்களே பெரும்பான்மையாக உள்ளனர். தற்போது கொழும்புப் பகுதியில் உள்ள வர்த்தக வலயத்தையும் நாட்டின் வேறு பகுதிக்கு விஸ்தரிக்க சட்டம் இடம் கொடுக்கிறது. இச்சட்டத்தின் மூலம் திருகோணமலை வர்த்தகநிலையமாம், அதன்பின் சிங்கள குடியேற்றமும் நடைபெறும்.

## வெங்காயம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பொருள் மொத்த விற்பனையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வர்த்தக அமைச்சர் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்தே இந்த விலைக் குறைப்பை அமுல்செய்ய மொத்த விற்பனையாளர்கள் நேற்று விருப்பம் தெரிவித்துள்ளனர்.

## ஒரே வீட்டில் இருவர் தற்கொலை!

[மட்டுவில்]

கர்ப்பிணியான திருமணமாகாத பெண்ணும், அவரது சகோதரியின் கணவரும் ஒரே வீட்டில் நச்சுத்திராவகம் அருந்தித்தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் சரசாலை வடக்கில் நடந்துள்ளது.

23 வயதான இந்திராதேவி செல்லையாவின் மரண விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம், 3 பிள்ளைகளுக்கு தந்தையான அவரது அத்தான் மாணிக்கவாசகர் (வயது 32) நஞ்சுத்திரசவகம் அருந்திவிட்டதாக தகவல் கிடைத்தது.

மரண விசாரணை அதிகாரி திரு. சி. பாலகிருஷ்ணன் இரு மரண விசாரணைகளையும் நடத்திஞர். சாவகச்சேரி பொலிஸ் கான்ஸ்டபிள் எம், ஐ. எம், பாரூக், விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்.

மாணிக்கவாசகர் மங்களேஸ்வரியை (25 வயது) திருமணம் செய்திருந்தாரென்றும், இவர்களுக்கு 3 குழந்தைகள் உண்டென்றும், இவர்கள் வீட்டில் வாழ்ந்துவந்த இந்திராதேவி, கர்பபிணியென்பதை அறிந்து பெற்ருேர் அதுபற்றி கேட்டபோது அவர் அந்த ரகசியத்தை வெளியிடாமலே நச்சுத்திராவகம் அருந்திஞர் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

குழந்தையின் தந்தை யார்? என்பது பற்றி கேள்வி எழுந்தபோது. அதேவீட்டில், மாணிக்கவாசகர் நச்சுத்திராவகம் அருந்திஞரெனக் கூறப்படுகிறது.

தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி திர்ப்பளித்தார்.

## 'காலியில் சகஜநிலை'

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

[கொழும்பு]

'காலியில் சிங்களச் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்குமிடையே எழுந்த தனிப்பட்ட குரோதம் காரணமாக அங்கு சிறு குழப்பம் ஏற்பட்டு பதட்டநிலை தோன்றியுள்ளது. இதை அடுத்து காலியில் கடை ஒன்று சேதப்படுத்தப்பட்டுள்ளது '

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. அறிக்கை மேலும் கூறுவதாவது:

'அரசுக்கு விரோதமான சக்திகள் இந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்தி இனக்குழப்பத்தை தூண்டிவிட முயற்சி செய்து வருகின்றனர். ஆனுல் அரசு உறுதியான நடவடிக்கையை எடுத்துள்ளதினுல் அங்கு இப்போது சகஜ நிலை திரும்பிவிட்டது.

'இதுபோன்ற அரசு விரோத நடவடிக்கைகளை அரசு என்றுமே பார்த்துக் கொண்டிருக்காது.

"அரசுக்கும் மக்களுக்கும் விரோதமான சக்திகளினுல் பரப்பப்படும் பொய்யான வதந்திகளை நம்பவேண்டாம் என பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறேம்."

## யாழ். குடாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திறமையாக ஓட்டியிருக்கிறுர்கள். இங்கு பல்புக்கு பெரும் தட்டுப்பாடாக இருக்கிறது. மற்றும் உதிரிப்பாகங்களையும், உடனடியாக அனுப்பவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

உதவிஅமைச்சர் காரைநகர் டிப்போவிற்கு நேற்றுக்காலை சென்று நேரில் பார்வையிட்டார். [பரு-நிரு]

## பார்வையாளர் தங்கும் இடம்



யாழ். ரோட்டரி கழகத்திஞல் யாழ். ஆஸ்பத்திரியில் 30 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள பார்வையாளர் தங்கும் மண்டபத்தை இன்று காலை ரோட்டரிகழக மாவட்ட கவர்னரும் மதுரையைச் சேர்ந்த பிரபல தொழில் அதிபருமான திரு. ரி. மாணிக்கவாசகர் திறந்து வைக்கிறுர். ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கும் நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் இதுவரை தங்கியிருக்க இடமின்றி மழையிலும் வெய்யிலிலும் வீதிகளில் நின்று கஷ்டம் அனுபவித்தவர்களுக்கு இனிமேல் கஷ்டமிருக்காதென ரோட்டரி கழக உறுப்பினர் தெரிவித்தார். உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள கவர்னருக்கு இன்று யாழ். ரோட்டரிக் கழகத்தினர் இராப்போசன விருந்தளித்துக் கௌரவிப்பர். (இ)

## இளம்பெண் தற்கொலை

[மட்டுவில்]

காதலில் தோல்வி ஏற்பட்டதால், இளம்பெண் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் எழுதுமட்டுவாளில் நடந்துள்ளது.

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த தங்கமலர் இராசையாவின் (18 வயது) மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு சி. பாலகிருஷ்ணன் விசாரணை நடத்திஞர். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எம். ஐ. எம். பாருக், விசாரணைக்கான ஏற்பாட்டை செய்தார்.

விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. [க]

## மரண அறிவித்தல்

### செல்விசி. இராஜேஸ்வரி

நடராஜா பிரதர்ஸ் திருநெல்வேலிச்சந்தி, உரிமையாளர் சிவசுப்பிரமணியம், திருமதி சி. இந்திராணியின் அன்பு மகள் இராஜேஸ்வரி காலமாஞர். இவர் மாணிக்கம், காலம்சென்ற தங்கம்மாவினது பேரப்பிள்ளையும், புஷ்பராணி, லோகநாயகி, சர்வேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியுமாவர். அன்ஞரது இறுதிச் சடங்குகள் கொக்குவில் மயானத்தில் இன்று [24-1-78] செவ்வாய்கிழமை மாலை நடைபெறும். 8305

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.